# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 8
## 2026, பிப்ரவரி 20, வெள்ளிக்கிழமை
## மாசி 8, திருவள்ளுவர் ஆண்டு – 2057

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன.

**"படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு."**

(ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையாவளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க உடையதே அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும்.)

1. <u>அரசினர் சட்டமுன்வடிவுகள் (திரும்பப் பெறுதல்)</u>

(1) <u>2023–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2023)</u>

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 11.10.2023–ஆம் நாளன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட மேற்படி சட்டமுன்வடிவை திரும்பப்பெற அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு திரும்பப் பெறப்பட்டது.

(2) <u>2025–ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2025)</u>

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 17.10.2025–ஆம் நாளன்று பேரவையில் நிறைவேற்றப்பட்ட மேற்படி சட்டமுன்வடிவை திரும்பப்பெற அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு திரும்பப் பெறப்பட்டது.

2. <u>அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)</u>

<u>2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

..2

3. <u>2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் 2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை பேரவைமுன் வைத்தார்.

4. <u>2025–2026–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி)</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் 2025–2026–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை (இறுதி) பேரவைக்கு அளித்தார்.

5. <u>2026–2027–ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் 2026–2027–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீதான பொது விவாதத்திற்குப் பதிலுரை.</u>

2026–2027–ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கு மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

2026–2027–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்திற்கு மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கினார்கள்.

6. <u>2025–2026–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) (ஆளுநரின் செய்தி)</u>

2025–2026–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**<u>MESSAGE</u>**

**"In pursuance of Clause (2) of Article 205, read with clause (3) of Article 203, of the Constitution of India, I, R.N. RAVI, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial year 2025-2026."**

7. <u>2025–2026–ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) மீது வாக்கெடுப்பு.</u>

2025–2026–ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் (இறுதி) அடங்கிய 20.2.2026–ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி துணை நிதிநிலையை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2025–2026–ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்தார்.

..3

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் முழுமையாக அரசுக்கு வழங்கப்பட்டன.

**8. 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (எண் 2) (ஆளுநரின் இசைவு)**

2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (எண் 2) பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**9. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)**

**2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு**

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

**10. 2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (ஆளுநரின் செய்தி)**

2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**MESSAGE**

**"In pursuance of Clause (3) of Article 203 of the Constitution of India, I, R.N. RAVI, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants for the Financial year 2026-2027."**

**11. 2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் (ஆளுநரின் செய்தி)**

2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

**MESSAGE**

**"In pursuance of Clause (2) of Article 206,read with clause (3) of Article 203, of the Constitution of India I, R.N. RAVI, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for grants in advance, during the Financial year 2026-2027."**

12. <u>2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.</u>

<u>கோரிக்கை எண்.1 – மாநில சட்டமன்றம்</u>

மாநில சட்டமன்றம் பற்றிய மானியக் கோரிக்கை எண்.1–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.52,92,41,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை</u>

ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய மானியக் கோரிக்கை எண்.2–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.49,07,97,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.3 – நீதி நிருவாகம்</u>

நீதி நிருவாகம் பற்றிய மானியக் கோரிக்கை எண்.3–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,304,22,42,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,000/– மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.4 – ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை</u>

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.4–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,932,95,60,000/–, மூலதனக் கணக்கில் ரூ.610,73,32,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.5 – வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை</u>

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.5–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.9,914,76,27,000/–, மூலதனக் கணக்கில் ரூ.125,52,62,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,30,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

..5

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)</u>

கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீன்வர் நலத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண் 6–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,014,70,57,000/–, மூலதனக் கணக்கில் ரூ.32,25,76,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.7 – மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)</u>

மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.7–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.501,51,58,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.455,74,12,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.8 – பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை)</u>

பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.8–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.162,69,97,000/–, மூலதனக் கணக்கில் ரூ.390,00,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.325,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.9 – பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.9–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.907,92,34,000/–, மூலதனக் கணக்கில் ரூ.151,87,05,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

..6

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.10 – வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை)**

வணிகவரிகள் (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.10–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.415,24,52,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை)**

முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிகவரி மற்றும் பதிவுத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.11–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.305,54,53,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,000/– மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.12 – கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)**

கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.12–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,260,98,30,000/–, மூலதனக் கணக்கில் ரூ.8,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,30,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.13 – உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)**

உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.13–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,860,92,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.240,00,06,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

..7

**<u>கோரிக்கை எண்.14 – எரிசக்தித் துறை</u>**

எரிசக்தித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.14–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,159,18,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,034,24,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.4,279,08,02,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.15 – சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை)</u>**

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.15–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.66,58,94,000/–, மூலதனக் கணக்கில் ரூ.46,80,05,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.16 – நிதித் துறை</u>**

நிதித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.16–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,293,93,56,000/–, மூலதனக் கணக்கில் ரூ.9,25,06,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.147,27,17,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)</u>**

கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.17–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,102,07,58,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,53,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.18 – கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)</u>**

கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.18–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.160,73,69,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.19 – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை</u>**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.19–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,801,51,27,000/–, மூலதனக் கணக்கில் ரூ.556,20,36,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.20 – உயர்கல்வித் துறை</u>**

உயர்கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.20–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,099,82,61,000/–, மூலதனக் கணக்கில் ரூ.428,05,77,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.21 – நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை</u>**

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.21–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,482,53,65,000/–, மூலதனக் கணக்கில் ரூ.12,252,72,42,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

..9

**<u>கோரிக்கை எண்.22 – காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)</u>**

காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.22–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,579,79,26,000/–, மூலதனக் கணக்கில் ரூ.229,80,18,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.15,27,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)</u>**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.23–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.378,89,36,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.54,98,08,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.24 – சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)</u>**

சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.24–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.364,50,93,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.195,00,05,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.25 – இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)</u>**

இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.25–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.551,40,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

..10

**<u>கோரிக்கை எண்.26 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை</u>**

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.26–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,487,61,50,000/–, மூலதனக் கணக்கில் ரூ.7,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,417,70,02,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.27 – தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை</u>**

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.27–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,424,93,99,000/–, மூலதனக் கணக்கில் ரூ.928,77,68,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.429,33,75,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.28 – செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)</u>**

செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.28–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.165,88,99,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.5,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.29 – சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)</u>**

சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.29–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.160,91,23,000/–, மூலதனக் கணக்கில் ரூ.208,97,33,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,30,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>**கோரிக்கை எண்.30 – எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)**</u>

எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.30–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.119,17,95,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.6,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>**கோரிக்கை எண்.31 – தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை**</u>

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.31–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.71,26,91,000/–, மூலதனக் கணக்கில் ரூ.70,89,26,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>**கோரிக்கை எண்.32 – தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை**</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.32–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,165,39,26,000/–, மூலதனக் கணக்கில் ரூ.130,86,15,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,43,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>**கோரிக்கை எண்.33 – சட்டத் துறை**</u>

சட்டத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.33–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.79,73,30,000/–, மூலதனக் கணக்கில் ரூ.7,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,30,00,000/– ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.34–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,439,49,43,000/–, மூலதனக் கணக்கில் ரூ.6,981,30,84,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.926,54,26,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.35 – மனிதவள மேலாண்மைத் துறை</u>**

மனிதவள மேலாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.35–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.129,35,01,000/–, மூலதனக் கணக்கில் ரூ.34,13,21,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,95,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.36 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை</u>**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.36–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.236,94,66,000/–, மூலதனக் கணக்கில் ரூ.64,51,30,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.37 – மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)</u>**

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.37–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.174,68,58,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

..13

**<u>கோரிக்கை எண்.38 – பொதுத் துறை</u>**

பொதுத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.38–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,623,04,84,000/–, மூலதனக் கணக்கில் ரூ.169,43,71,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.9,73,75,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.39 – கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)</u>**

கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.39–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.324,10,61,000/–, மூலதனக் கணக்கில் ரூ.776,41,88,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.52,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.40 – நீர்வளத் துறை</u>**

நீர்வளத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.40–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.3,253,13,68,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,295,34,35,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>13. உலக தாய்மொழி தினத்தை முன்னிட்டு உறுதிமொழி</u>**

எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்
எப்போதும் தமிழ்
என்ற நடைமுறையை
கொண்டு வரப் பாடுபடுவோம்.

தேமதுரத் தமிழோசை
உலகெங்கும் ஒலிக்க
எந்நாளும் உழைத்திடுவோம்.

அனைத்து ஆவணங்களிலும்
தமிழிலேயே
கையொப்பமிடுவோம்.

குழந்தைகளுக்குத்
தமிழ் மொழியில்
பெயர் சூட்டப்
பரப்புரை செய்திடுவோம்.

..14

இணையற்ற தமிழுடன்
இணையத் தமிழையும்
காத்து வளர்ப்போம் என்று
உளமார உறுதி கூறுகிறேன்.

மேற்காணும் உறுதிமொழியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவையில் படிக்க அவரைத் தொடர்ந்து வாசித்து சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் உறுதியேற்றனர்.

14. <u>2026–2027–ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு – தொடர்ச்சி...</u>

<u>கோரிக்கை எண்.41 – வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை</u>

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.41–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,707,70,36,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.97,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.42–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.15,096,33,62,000/–, மூலதனக் கணக்கில் ரூ.3,549,39,53,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

<u>கோரிக்கை எண்.43 – பள்ளிக் கல்வித் துறை</u>

பள்ளிக் கல்வித் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.43–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.30,824,35,54,000/–, மூலதனக் கணக்கில் ரூ.721,69,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.78,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

..15

**கோரிக்கை எண்.44 – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.44–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,262,51,78,000/–, மூலதனக் கணக்கில் ரூ.6,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.45 – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.45–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,595,73,80,000/–, மூலதனக் கணக்கில் ரூ.15,21,12,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.46 – தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை)**

தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.46–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.93,42,30,000/–, மூலதனக் கணக்கில் ரூ.4,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.65,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.47 – இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)**

இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.47–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.507,13,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.16,28,65,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

..16

**கோரிக்கை எண்.48 – போக்குவரத்துத் துறை**

போக்குவரத்துத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.48–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.5,637,81,76,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,240,13,45,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.611,99,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.49–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.400,42,74,000/–, மூலதனக் கணக்கில் ரூ.66,03,62,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.50 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய மானியக் கோரிக்கை எண்.50–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,996,19,54,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.51– இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய மானியக் கோரிக்கை எண்.51–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,331,21,25,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பட்டன.

**கோரிக்கை எண்.52 – மாற்றுத் திறனாளிகள் நலத் துறை**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.52–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.954,25,34,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,17,35,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

..17

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை</u>**

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.53–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.11,107,35,84,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.54 – வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை)</u>**

வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) பற்றிய மானியக் கோரிக்கை எண்.54–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.513,86,58,000/–, மூலதனக் கணக்கில் ரூ.511,90,60,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

**<u>கோரிக்கை எண்.55 – இயற்கை வளங்கள் துறை</u>**

இயற்கை வளங்கள் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண்.55–இன் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.85,44,54,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.32,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் என்று மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப்பட்டன.

15. **<u>2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (ஆளுநரின் இசைவு)</u>**

2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

..18

16. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு ) சட்டமுன்வடிவு

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

17. அரசினர் தீர்மானம்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:–

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிது ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு (சட்டமுன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.12/2026), 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.13/2026) மற்றும் 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.11/2026) ஆகியவற்றை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

18. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(1) 2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்.2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.12/2026)

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

..19

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(2) <u>2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.13/2026)</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(3) <u>2026–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.11/2026)</u>

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று கோரினார்.

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியன சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

..20

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

19. பதினாறாவது சட்டமன்றப் பேரவை நிறைவு – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்தார்கள்.

மேலும், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. ஜி.கே. மணி, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. வி.பி. நாகைமாலி, திரு. ட்டி. இராமச்சந்திரன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. தி. வேல்முருகன் மற்றும் திரு. பி. அய்யப்பன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

20. <u>பதினாறாவது சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்த அறிவிப்பு</u>

பதினாறாவது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அலுவல்கள் குறித்த விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்கள்.

21. <u>பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கும் தீர்மானம்</u>

சட்டமன்றப் பேரவை விதி 25(1)–இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்தார்கள்.

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பேரவை பிற்பகல் 1.44 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**